
Azim Premji Foundation

# விழாக்கள்




**ஆசிரியர் கையேடு**


Web Diagram - Festivals
Festivals
Place of Worship
Temple
Mosque
Church
Public festivals
Republic Day
Independence Day
National Symbol
National Anthem
National Flag
Leaders
Patriotism
Local Festivals
Religion
Muslim
Miladinabi
Bakrid
Ramdan
Muharam
Prayer
Dress
Biriyani
Christian
Good Friday
New Year
All Souls Day
Easter
Christmas
Prayer
Star
Cake
Dress
Hindu
Onam
Saraswathi pooja
Vinayagarchadurthi
Deepavali
Pongal
Tamil New Year
Dussehra
Celebrations
Sweets
Crackers
Gifts
Dress
Culture
Farmers
Paddy
Sugarcane
Sunlight
Dress
Animals
Water

| Component | Day 1 | Day 2 | Day 3 | Day 4 |
|---|---|---|---|---|
| **உரையாடல்** | பொங்கல் கொண்டாடிய விதம் மற்றும் பொங்கல் பண்டிகையின் நோக்கம் | மதம் சார்ந்த பண்டிகைகள் உள்ளூர் கோவில் திருவிழாக்கள் (local Festivals) | கொண்டாட்டங்களின் முக்கியத்துவம், கொண்டாட்டங்களின் போது பகிர்தல், மற்ற மத உணர்வுகளை மதித்தல் Double activity | தேசிய விழாக்கள் ( National Festivals) Double activity |
| | Day 5 | Day 6 | Day 7 | Day 8 |
| | நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்கள் | படங்களைக் காண்பித்து உரையாடுதல் – விழாக்கள் – பொங்கல், தீபாவளி ரம்ஜான், கிறிஸ்துமஸ். | படங்களைக் காண்பித்து உரையாடுதல் – சுதந்திரதின விழா , குடியரசு தின விழா. Double activity | திருப்புதல் Double activity |

ஆசிரியர், பண்டிகைகளின் படங்களைக் காண்பித்து, இது என்ன பண்டிகை? இதை எப்படி கொண்டாடுவோம்? ஏன் அவ்வாறு கொண்டாடுகிறோம்? போன்ற சிறப்பம்சங்களைப் பற்றியும் பண்டிகைக் காலங்களில் உண்ணப்படும் உணவுவகைகள் அவற்றிற்கான காரணங்கள் பற்றியும், உரையாடலாம்.
தேசிய விழாக்கள் பற்றியும் அவைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும் , தேசிய தலைவர்கள் பற்றிய செய்திகளையும் மிக எளிய வகையில் குழந்தைகளோடு கலந்துரையாடலாம்.




**விழாக்களின் முக்கியத்தும்**















**விழாக்களின் முக்கியத்தும்**

ஆசிரியர், குழந்தைகளிடம் திருவிழாக்களின் முக்கியத்துவத்தைப் பற்றி உரையாடலாம். எ.கா. ஒன்று கூடுதல், கூடி உண்ணுதல், மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல், வாழ்த்துகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுதல், போன்ற சிறப்பம்சங்களை பற்றி உரையாடலாம்.

**எ. கா. வினாக்கள்**

பண்டிகைகளின் போது நாம் ஏன் இனிப்பு பரிமாறிக்கொள்கிறோம்?

தேசிய விழாக்களின் போது தேசிய கொடி எங்கெல்லாம் ஏற்றப்படுகிறது?


## திருவிழாக்களின் காரணங்களும் மற்றும் நோக்கங்களும்




சுதந்திர தின விழா



இனிப்புப் பரிமாறுதல்




நாம் கொண்டாடும் ஒவ்வொரு விழாவிற்கும் சில காரணங்களும், உடல் சார்ந்த நோக்கங்களும் உள்ளன.
பண்டிகை காலங்களில் விரதம் இருத்தல் உடலை வலுப்படுத்தும்.
அந்தந்த காலநிலைக்கு ஏற்ற உணவுப்பழக்கம் உடலுக்கு நன்மை பயக்கும்.
இயற்கைப் பாதுகாப்புப் பற்றியும், சுற்றுப்புற தூய்மையைப் பற்றியும் வலியுறுத்துவதாக அமையும்.
சில பண்டிகை அனைத்து உயிர்களையும் நேசிக்கக் கற்றுக்கொடுக்கிறது.
தேசிய விழாக்களை பற்றி உரையாடும் போது காந்தி பற்றியும் அவரது கொள்கைகளை பற்றியும் குழந்தைகளிடம் உரையாடி வாழ்கையில் கடைபிடிக்க வலியுறுத்தலாம்.

## பாதுகாப்பு நடவடிக்கைகள்



பண்டிகைகள் கொண்டாடும்போது எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்
தீபாவளி – பட்டாசுக்களைக் கவனமாக வெடித்தல், இனிப்பு உணவுகளை அளவோடு உண்ணுதல்.
பொங்கல் – பட்டம் விடும்போது பறவைகளுக்கு இடையூறு செய்யாமல் இருத்தல்
மாட்டுப்பொங்கல் – மாடுவிரட்டும்போது பாதுகாப்பான இடத்தில் இருப்பதை






| component | Day 1 | Day 2 | Day 3 | Day 4 |
|---|---|---|---|---|
| Songs | பொங்கலோ பொங்கல் | | | |
| | **Day 5** | **Day 6** | **Day 7** | **Day 8** |
| | கொண்டாடுவோம், கொண்டாடுவோம் | | | |

## பாடல் - 1



பொங்கலோ பொங்கல் - (4)
பொங்கல் வருது, பொங்கல் வருது
கொண்டாடலாம் வாங்க,

உழைக்கும் நம்ம உழவர்க்கெல்லாம்
நன்றி சொல்லலாம் வாங்க.
ஒளி கொடுக்கும் சூரியனும்
நமக்குத் தெய்வம் தாங்க.
இயற்கைக்கு நன்றி சொல்லி
கொண்டாடலாம் வாங்க.
பொங்கல் வருது, பொங்கல் வருது
கொண்டாடலாம் வாங்க.
பொங்கலோ பொங்கல் – (4)

## பாடல் - 2



கொண்டாடுவோம்,
கொண்டாடுவோம்
பண்டிகைகள்
கொண்டாடுவோம்


கொண்டாடுவோம்.
கொண்டாடுவோம்
சந்தோஷமாக
கொண்டாடுவோம்.

தீபாவளி கொண்டாடுவோம்
பொங்கலும் தான்
கொண்டாடுவோம்
கிறிஸ்துமஸையும்
கொண்டாடுவோம்
ரம்ஜானும் தான்
கொண்டாடுவோம்
(கொண்டாடுவோம்)

புத்தாடை உடுத்துவோம்
பட்டாசைக் கொலுத்துவோம்
இனிப்பெல்லாம் சாப்பிடுவோம்
எல்லோரும் சேர்ந்திடுவோம்.
(கொண்டாடுவோம்)

| Component | Day-1 | Day-2 | Day-3 | Day-4 |
| --- | --- | --- | --- | --- |
| கதை | மொங்கல் சுட்ட பொங்கல்- கதை | | | |
| **Activity** | **Day 5** | **Day 6** | **Day 7** | **Day 8** |
| | Mina Celebrates Pogal – ஆங்கில கதை , மற்ற பொங்கல் கதைகள் | | | |








**மொங்கல் சுட்ட பொங்கல்- கதை**

ஆசிரியர், கதையிலுள்ள கதாபாத்திரங்களுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு முகபாவனைகள், உடல் அசைவுகள் மற்றும் குரல் ஏற்ற இறக்கங்களுடன் குழந்தைகளுக்குக் கதையைச் சொல்லலாம்.

- முதலில் கதையின் தலைப்பைச் சொல்லலாம்.
- கதையிலுள்ள கதாபாத்திரங்களின் படங்களை அல்லது உருவங்களைக் காண்பித்து அறிமுகப்படுத்தலாம்.
- முகபாவனைகள், உடல் அசைவுகள் மற்றும் குரல் ஏற்ற இறக்கங்களுடன் குழந்தைகளுக்குக் கதையைச் சொல்ல ஆரம்பிக்கலாம்.



**சர்க்கரை பிரியாணி**

ராமு: இன்னிக்கு எங்க அம்மா சர்க்கரை பிரியாணி கொடுத்தாங்கடா

சோமு; சர்க்கரை பிரியாணியா?

ராமு: ஆமாடா, ரொம்ப டேஸ்டா, இருந்துச்சு,

சோமு: எப்படிடா செஞ்சாங்க?

ராமு: அடுப்புல புதுசா ஒரு மண் பானைய வச்சு செஞ்சாங்கடா.

சோமு; மண் பானையா?

ராமு: ஆமாடா. மண் பானையில தண்ணீர் ஊத்தி, பச்சரிசி, பருப்பெல்லாம் கழுவிப் போடங்கடா?

சோமு: அப்புறம்?

ராமு; சர்க்கரை, ஏலக்காய், கிஸ் மிஸ் பழம், முந்திரி பருப்பு, நெய்யெல்லாம் ஊத்துனாங்கடா?

சோமு: சர்க்கரை, நெய்யெல்லாம் போட்டாங்களா? இனிப்பா, வாசமா இருந்திருக்கும்லா?

ராமு; ஆமாடா, ரொம்ப டேஸ்டா, வாசமா இருந்துச்சு, இந்தா உனக்கும் கொண்டு வந்துருக்கேன்.

சோமு: ரொம்ப சூப்பரா இருக்குடா, ஆனா, எங்க அம்மாவும் இது மாதிரி செஞ்சிருக்காங்களே!

ராமு: டேய், இதுக்குப் பேரு சர்க்கரை பிரியாணி தானா?

சோமு: தெரியலையே? உங்க யாருக்காவது தெரியுமா?

**பொங்கலுக்கு காத்திருக்கும் மாடு**

ஆடு: மாடு அண்ணே, ஏன், நம்ம வீட்டுடெல்லாம் சுத்தம் செய்றாங்க, கலர் அடிக்கிறாங்க?

மாடு: ஆமால, எனக்கென்னமோ, பொங்கல் வரப்போகுதுனு நினைக்கிறேன்.

ஆடு: பொங்கலா?

மாடு: ஆமா, பொங்கல் வந்தா, நம்மலையும் குளிப்பாட்டி பொட்டல்லாம் வைப்பாங்க?

ஆடு: என்னது, நம்மலையும் குளிப்பாட்டி, பொட்டு வைப்பாங்களா? ஏன்?

மாடு; ஏன்னா, பொங்கலுன்றது நன்றி சொல்லுற பண்டிகை?

ஆடு: நன்றி சொல்லுவாங்களா? யாருக்கெல்லாம் நன்றி சொல்வாங்க?

மாடு: நெல்லு விளையுறதுக்கு வெளிச்சம் கொடுக்கிற சூரியனுக்கு நன்றி சொல்வாங்க, வயல்ல வேலை செய்யுற உழவர்களுக்கு நன்றி சொல்வாங்க.

ஆடு: அப்போ நமக்கு எதுக்குனே நன்றி சொல்வாங்க?

மாடு: நாம தானே நிலத்தை உழவதற்கு உதவி செய்யுறோம், பொருட்களை வண்டியில இழுத்திட்டுப் போறோம்.

ஆடு: அண்ணே, நாங்க ஒன்னுமே செய்யலியே?

மாடு: நாம சாப்பிட்டுட்டு போடுற சாணத்தைத் தானே தோட்டத்துக்கு, வயலுக்கு உரமா போடுறாங்க.

ஆடு. ஓ! அப்படியானே! அப்போ அன்னைக்கு நமக்கு சாப்பிட நிறையா குடுப்பாங்களா?

மாடு: ஆமா, நம்மல குளிப்பாட்டி, பொட்டு வச்சு, சாப்பிடுறதுக்கு நிறையா இனிப்பான கரும்பு, பொங்கலெல்லாம் கொடுப்பாங்க.


ஆடு: ஓ! அப்போ ஜாலி, சந்தோசம்னே!

மாடு: ஆமா, ஆமா ஜாலி தான், வேகமா பொங்கல் வரட்டும்.


| Activity | Day-1 | Day-2 | Day-3 | Day-4 |
|---|---|---|---|---|
| பள்ளிக்குத் தயார் படுத்துதல் | எண்களின் வரிசைப்படி கட்டங்களில் குதித்தல் | எண்களின் வரிசைப்படி கட்டங்களில் குதித்தல் | Number Pattern | Number Pattern |
| | **Day-5** | **Day-6** | **Day-7** | **Day-8** |
| | One Less and One More – addition Concept | One Less and One More – addition Concept | One Less and One More – addition Concept | தொகுத்து வழங்குதல் |

- **ஆசிரியர் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் வகுப்பு மாணவர்களை மூன்று அல்லது நான்கு பேர்கொண்ட குழுக்களாகப் பிரித்துக் கொள்ளலாம். பின் ஒவ்வொரு குழுவிற்கும் படத்தில் கொடுக்கப்பட்டவாறு 5 கட்டங்களைத் தரையில் வரைந்து கொள்ள வேண்டும். அதன் பக்கத்தில் நிறைய பொருட்களை வைத்து விடவும் ( எ.கா. பேனா, பென்சில், சாக்பீஸ், பாட்டில்...என 10 பொருட்கள்). ஒரு குழுவில் உள்ள ஒரு குழந்தை மட்டும் விளையாட்டை விளையாடும்போது, மற்ற குழந்தைகள் கவனிக்க வேண்டும். மேலும் இரண்டாவது அல்லது மூன்றாவது படத்தில் உள்ளதுபோல் விளையாட வைக்கலாம்.**

Pic - 1




Pic - 2




Pic - 3




Pic - 4




Pic - 5




எண்ணறிவு


குழந்தைகளிடம் சிறு சிறு கற்களையோ மணிகளையோ கொடுத்துப் படத்தில் உள்ளதுபோல அடுக்கி வைக்க சொல்லுதல். இவ்வாறு செய்யும்போது ஒன்று, இரண்டு என்று குழந்தைகள் எண்ணாமல் எண்களைக் கூட்டும் திறனைப் பெருகின்றனர்.

படம் ஐந்தில் உள்ளதுபோல் சிறு சிறு காகித குவளைக்குள் உள்ள பொருட்களை ஒன்றை எடு / ஒன்றை சேர் என்பன போன்ற விளையாட்டுகள் விளையாடும்போது அவர்களுக்கு மேல் வகுப்பில் கற்றுத் தரப்படும் கூட்டல், கழித்தலைப் புரிந்து கொள்ள எளிதாக உதவும்.

:

பயிற்சித்தாள் 1 - எதிர் எதிர் பக்கங்களில் படங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். குழந்தைகள் பொருத்தமானவற்றைக் கோடிட்டுப் பொருத்திக் காட்டுவர்.




பயிற்சித்தாள் 2 – கொடுக்கப்பட்டுள்ள ஒரு படம் பலவற்றோடும் பொருந்துவதாக இருக்கலாம். ஆகவே குழந்தைகள் ஒன்றிற்கு மேற்பட்ட கோடிட்டுக்காட்டலாம். . உதாரணம் புத்தாடை, இனிப்பு ஆகியவை தீபாவளி, பொங்கல் என இரண்டு பண்டிகைகளுக்கும் பொருந்தும். ஆகவே, குழந்தைகள் இவை இரண்டிற்கும் கோடிட்டுக் காட்டலாம்.











## வண்ணம் தீட்டுதல்


Picture Conversation




Picture Conversation



Sample double picture and word cards





அம்மா
ஆடு இட்லி
அப்பா

உடல்
ஈசல் அம்மா
ஊஞ்சல்

எலி
அம்மா ஏழு
ஐந்து

ஓடு
ஔவை ஒன்று
அம்மா